(இ) இத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் சுமார் 380 ஏக்கர் புதிய நிலப்பரப்பு பாசன வசதி பெறும்.

THIRU K. KOTHANDERAMIAH : Sir Sulagiri area where it is proposed to do this work is a Zamindari area. Even in the Governor's address it has been stated that Government are taking steps to do such work in Zamindari areas. May I know from the Hon. Minister for Public Works and when the work will be completed?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் விரிவான ஆய்வில் இருக்கிறது. அங்கிருந்து சிபார்சு போர்டுக்கு வந்து, ரெவின்யூ போர்டில் இருந்து அரசுக்கு வந்தவுடன், அதனைப் பரிசீலனை செய்து ஆணை பிறப்பிக்கப்படும்.

கடம்பாகுளம் தலை மதகினை அகலப்படுத்தல்

*77 வினா—**திரு. க. உரொ. எட்மண்ட்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதியிலுள்ள கடம்பாக்குளத்தின் தலை மதகினை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம். அரசு ஆணை எண் 1399, பொதுப்பணித்துறை, நாள் 3—9—1973-ல் கடம்பாக்குளத்தின் பொறையூர் தலை மதகினில் மேலும் நான்கு புதிய கண்ணறைகள் (Vents) அமைக்க ரூ. 3.35 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

(இ) இவ்வேலை வரும் ஏப்ரல் திங்களில் அதாவது பாசனத்திற்கு விடப்படும் தண்ணீர் நிறுத்தப்படும் காலத்தில், ஆரம்பிக்கப்படும்.

பொதுப் பணித்துறை இளநிலைப் பொறியாளர்களது பணிகள்

*78 வினா—**திரு. மே. சி. தூாமணி:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970 முதல் பொதுப் பணித்துறை நெடுஞ்சாலைத் துறை முதலியவற்றில் 500-க்கும் மேற்பட்ட இளம் பொறியாளர்களது பணி வரன் முறைபடுத்தப்படாமல் உள்ளதா?